## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.S.T.C. 321/2022**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தேவேந்திரன் | தொழில் | : நடத்துனர் |
| தந்தை பெயர் | : சந்திரன் | சமயம் | : |
| கிராமம் | : வடபாலை | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.சித்ரா W.Gr.I-2665 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து செஞ்சி பணிமனையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி நான் பணிபுரியும் பணிமனையில் ஓட்டுநர் ஆவார்.

2.

எனக்கு களவாய் கூட்ரோடு அருகே ஜே.சி.பி இயந்திரம் வைத்து செய்யும் அலுவலகத்தை வைத்துள்ளேன். கடந்த 6 வருடத்திற்கு முன்பாக மாதம், தேதி ஞாபகம் இல்லை. ஒருநாள் எனது அலுவலகத்தினுள் இருந்தேன். அப்போது எனது அலுவலகத்திலிருந்து 10 கடைக்கு அப்பால் விபத்து நடந்து டமால் என்று சத்தம் கேட்டது. அப்போது வெளியே வந்து பார்த்தேன். இருசக்கர வாகனத்தில் ஜெயபால் சென்றபோது கார் மோதி விபத்து ஏற்பட்டு ஜெயபால் கீழே விழுந்து கிடந்தார். மேற்படி ஜெயபாலின் மகன் ராம்குமார் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு போன் செய்து தகவல் சொன்னேன். ராம்குமார் வந்து அவரது தந்தையை மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவரை நான் பார்க்கவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய**

**அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் கடந்த 09.09.2017 ந் தேதி காலை 10.15 மணிக்கு நான் களவாய் கூட்ரேடு அருகே நின்று கொண்டிருந்தேன் என்றும் அப்போது இவ்வழக்கில் இறந்துபோன ஜெயபால் என்பவர் களவாய் கூட்ரோடு அருகே இடதுபுறமாக நின்று கொண்டிருந்தார் என்றும், அப்பொழுது செஞ்சியை நோக்கி வந்த KA04MS7131 என்ற Skoda காரின் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் அவர் மீது மோதியதில் அவருக்கு பலத்த அடி பட்டது என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரரணையில் தெரிவித்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

விபத்தை நேரில் பார்க்காததால் யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்பது குறித்து என்னால் கூற இயலாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**